பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

08 01 2025 **WEDNESDAY** 12 40 **PM**

தலைப்புச் செய்திகள்

1. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் முதலான புதிய வாய்ப்புகளை இளைய சமுதாயத்தினர் ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. புதிய குற்றவியல் சட்டங்கள் விரைந்து நீதி கிடைக்க வழிவகுத்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் முதல் கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

4. பெண்களின் பாதுகாப்பிற்கு மாநில அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. மலேசிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் எச்.எஸ். பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>><<<<<**

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், புத்தொழில்கள் முதலான பல்வேறு வாய்ப்புகளை இளைய சமுதாயத்தினர் ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலம், புவனேஷ்வரில் நடைபெற்று வரும் 18-வது வெளிநாடுவாழ் இந்திய இளைஞர்களின் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், வெளிநாடுவாழ் இந்திய இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி உருவாக்கி தந்திருப்பதாக தெரிவித்தார்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இந்திய இளைஞர்கள் தொடர்ந்து பல சாதனைகளை படைத்து வருவது தமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார்.

உலகின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான முயற்சியில் இளைஞர்களின் பங்கு மகத்தானது என்றும் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

18-வது வெளிநாடுவாழ் இந்தியர்கள் மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முறைப்படி தொடங்கி வைக்கிறார்.

இந்த மாநாட்டில் 75 நாடுகளைச் சேர்ந்த ஆறாயிரம் பேர் பங்கேற்றுள்ளனர்.

ஒடிசா மாநில அரசும், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையும் இணைந்து இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளன.

மாநாட்டின் நிறைவு நாளான நாளை மறுதினம் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்று பிரவாசி பாரதீய சம்மான் விருதுகளை வழங்க உள்ளார்.

ட்ரினிடாட் மற்றும் டொபாக்கோ அதிபர் திருமதி **Christine Carla kangaloo** சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

இந்த மாநாடு 'வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கு வெளிநாடுவாழ் இந்தியர்களின் பங்களிப்பு' என்ற கருப்பொருளில் நடத்தப்படுகிறது.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் மூன்று புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்களை முழுமையாக அமல்படுத்துவது குறித்த ஆய்வுக் கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது.

அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் மற்றும் மாநில உள்துறை அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பேசிய திரு. அமித் ஷா, புதிய குற்றவியல் சட்டங்கள் விரைந்து நீதி கிடைப்பதற்கு வழிவகுக்கும் என்று கூறினார்.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு தண்டனை வழங்குவதைக் காட்டிலும், மேலும் குற்ற செயல்களில் அவர் ஈடுபடாமல் இருப்பதற்கான வழிவகைகளையும் இந்த புதிய சட்டங்கள் கொண்டுள்ளதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் முதல் கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் தலைவரும் பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. பி.பி. சௌத்ரி, இன்றைய கூட்டத்தில் இந்த மசோதாக்கள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சகத்தின் சார்பில் உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

பல்வேறு தரப்பினரிடமிருந்தும் சட்ட வல்லுநர்களிடமிருந்தும், நீதித்துறை மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்தும், நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆலோசனை பெற்று, இதனை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான வழிவகைகள் குறித்து ஆய்வு செய்யும் என்று அவர் கூறினார்.

வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரின் முதல் நாளன்று குழுவின் அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்றும் திரு. சௌத்ரி தெரிவித்தார்.

39 உறுப்பினர்களைக் கொண்ட இந்த கூட்டுக்குழுவில் மக்களவையிலிருந்து 27 உறுப்பினர்களும், மாநிலங்களவையிலிருந்து 12 உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்களுக்கு மூன்று நாட்கள் பயிற்சி அளிப்பதற்கு சட்டப்பேரவை செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

நாளை முதல் சனிக்கிழமை வரை, ஜம்முவில் உள்ள சட்டப்பேரவை வளாக மைய மண்டபத்தில் அவர்களுக்கான பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

மக்களவை செயலகத்தின் கீழ் இயங்கும் நாடாளுமன்ற பயிற்சி நிறுவனத்தின் மூலம் இவர்களுக்கு சட்டப்பேரவை நடவடிக்கைகளில் பங்கு பெறுவதற்கான பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்டப்பேரவை விதிகளுக்கு உட்பட்டு உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளை அரசிடம் முன்வைப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்படவுள்ளது.

சட்டப்பேரவை தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்டு, அவையில் செயல்படுவதற்கான அறிவுரைகளும் இந்தப் பயிற்சியின் போது ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

அமெரிக்காவின் வர்ஜீனியா மாகாண பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் தமிழகத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் சீனிவாசனும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த திரு. ஜெ.ஜெ. சிங்கும் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

திரு. கண்ணன் சீனிவாசன் தமிழகத்தில் பயின்று கணக்காளராக தேர்வு பெற்ற பின் அமெரிக்கா சென்று பணியாற்றி வருகிறார்.

திரு. ஜெ.ஜெ. சிங்கின் குடும்பம், வர்ஜீனியாவில் வசித்து வருகிறது. அவர் அமெரிக்காவிலேயே பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

பெண்களின் பாதுகாப்பிற்கு மாநில அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று அண்ணா பல்கலைகழக மாணவி பாலியல் வன்கொடுமை தொடர்பாக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், இந்த வழக்கில் குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

60 நாட்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வழக்கில் தொடர்புடைய வேறு யாரேனும் இருந்தாலும் அவர்கள் மீதும் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களை மாநில காவல்துறை இரும்புக்கரம் கொண்டு அடக்கும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

முதலமைச்சரின் விளக்கத்தை ஏற்க மறுத்து அஇஅதிமுகவினர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

>>>>><<<<<

குடியரசு தினத்தன்று, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அளிக்கும் சிறப்பு விருந்தில் சென்னை முகப்பேரை அடுத்த நொழம்பூரைச் சேர்ந்த பார்வை மாற்றுத் திறனாளி திரு. கோவிந்த கிருஷ்ணன் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அம்பத்தூர் தொழிற்பேட்டை துணை அஞ்சல் நிலைய அதிகாரிகள் திரு. கோவிந்த கிருஷ்ணனை நேரில் சந்தித்து, மத்திய அரசின் சார்பில் அழைப்பிதழை வழங்கினர்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய பார்வை மாற்றுத் திறனாளி திரு. கோவிந்த கிருஷ்ணன், இந்த அழைப்பு தமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாக கூறினார்.

(சவுண்ட் பைட் – கிருஷ்ணன் 38 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

கானாவில் கடந்த மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற திரு. **John Gramani Mahama** புதிய அதிபராக பதவியேற்றுக் கொண்டார்.

தமது பதவியேற்பு நிகழ்ச்சியில் பேசிய அவர், கானா வரலாற்றில் புதிய அத்தியாயத்தை படைப்பதற்கு தமக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதாக கூறினார்.

அனைத்து துறைகளிலும நாடு வளர்ச்சியடைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தனியார் துறையில் அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் திரு. **John Gramani Mahama** கூறினார்.

>>>>><<<<<

வரும் 20ஆம் தேதி அமெரிக்க அதிபராக தாம் பதவியேற்பதற்கு முன்பாகவே, ஹமாஸ் அமைப்பினர் பிடித்து வைத்துள்ள அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்று திரு. டொனால்டு ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஃப்ளோரிடா மாகாணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிணையாக பிடித்து வைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்படாவிட்டால், அமெரிக்காவின் நடவடிக்கைகள் மிக கடுமையாக இருக்கும் என்று கூறினார்.

>>>>><<<<<

வடமாநிலங்களில் தொடர்ந்து கடும் குளிர் நிலவும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா, தில்லி, உத்திரபிரதேசம், பீகார், சண்டிகர், மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு காலை நேரத்திலும், இரவிலும் கடும் பனிமூட்டம் நிலவக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வடமேற்கு மற்றும் மத்திய மாநிலங்களில் வெப்ப நிலை இரண்டு முதல் நான்கு டிகிரி செல்சியஸ் அளவுக்கு இருக்கும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

பனிமூட்டம் காரணமாக வட மாநிலங்களில் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மலேசிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் எச்.எஸ். பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர் 21-12, 17-21, 21-15 என்ற செட்கணக்கில் கனடாவின் **Brian Yang**-ஐ வென்றார்.

இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ் கபிலா — தனிஷா கிறாஸ்ட்டோ இணை மற்றும் சதிஷ் கருணாகரன் - ஆத்யா வாரியத் இணைகளும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

>>>>><<<<<

ஆக்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி — பிரான்ஸின் அல்பெனோ ஒலிவேட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-4 என்ற செட்கணக்கில் நெதர்லாந்தின் **Sander Arends -** இங்கிலாந்தின் **Luke Johonson** இணையை வென்றது.

>>>>><<<<<

ரூர்கேலாவில் நடைபெற்று வரும் ஹாக்கி இந்தியா லீக் போட்டியின் இன்றைய ஆட்டங்களில் கோணாசிக்கா அணி — தமிழ்நாடு அணியையும், உத்திரபிரதேச அணி — ஹைதராபாத் அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>><<<<<